★ தென்மொலகாசில் பெரும் புரட்சி ★

Phone No 4502 — Regd. No. M. 5458

சில்லறை அரை அணா — இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. — MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (28—4—50) ✲ வெளியூர் (29—4—50) [இதழ் 238

இந்தோனேஷிய கூட்டு ஆட்சிக்கெதிராக சுதந்திரப் பிரகடனம்

புரட்சித் தீ மேலும் பரவலாமென எதிர்பார்க்கப்படுகிறது

அட்டா ஆட்சி உருப்படுமா ?

இரண்டாவது உலகப் போரின்போது, முக்கியமானதொரு கடற்படைத் தளமாகவிருந்த அம்பான் தீவிலுள்ள இந்தோனேஷியப் படைகள் இந்தோனேஷிய சர்க்காரை எதிர்த்து சுதந்தரப் பிரகடனம்செய்தன. அதனை 'தென் மொலாகஸ் குடியரசு' என்று அவர்கள் பெயரிட்டழைத்தனர்

அம்பான் தீவில் இன்று தோன்றியுள்ள இந்தப் புரட்சி பிலிப்பைன் தீவுக்கு தெற்கில் 275 மைல் தூரத்தில் உள்ள செலிபிஸ் தீவு வரைப் பரவும் என்று நம்பப்படுகிறது

டச்சு இந்தோனேஷிய படைகளுக்கு அம்பான் படைகள் கடந்த பல ஆண்டுகளாக முதுகெலும்பு போல் இருந்து வந்தவைகளாகும். அம்பான் தீவில் மட்டும் 5000 படை வீரர்கள் உள்ளனர் என்று ஒரு இராணுவ உத்தியோகஸ்தர் கூறுகிறார். அவர் மேலும் கூறுவதாவது:—

"சுதந்திரப் பிரகடனம்செய்திருக்கும் அம்பான் தீவை முற்றுகையிட்டு, முறியடிப்பது என்பது கூடாதகாரியம். அங்கு அரிசி குறைவாகக் கிடைத்தபோதிலும் மக்கள் ஜவ்வரிசியையும், மீனையும் தின்றே நெடுநாள் வாழ முடியும். ஏனெனில், முன்னர் ஜப்பானியர் அத்தீவைக் கைப்பற்றியபோதும் அம்மாதிரியே அவர்கள் உயிர் வாழ்ந்தனர்

செலிபசுக்கு வடக்கேயுள்ள மினஹாசா பகுதியிலும், விரைவில் புரட்சித் தீ பரவும் என்று நம்பப்படுகிறது.

இந்தோனேஷிய கூட்டாட்சிப்படைகள் அம்பான் தீவில் ஏற்பட்டிருக்கும் புரட்சியை அடக்கப் புறப்பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

அம்பான் நகரில் 4 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் பல்லாயிரக் கணக்கானவர் மலைகளில் சென்று பதுங்கி இருப்பதாகவும், இந்தோனேஷிய துருப்புகள் அத்தீவை அடைந்ததும் அவற்றைத் தாக்க சித்தமாயிருப்பதாகவும் சொல்லப்படுகிறது

இந்தோனேஷிய கூட்டாட்சிப் படையில் பங்கு கொள்ள மறுத்து, கிழக்கு இந்தோனேஷிய சர்க்கார் ராஜினாமா செய்துவிட்டது.

இவை, இந்தோனேஷியாவில் டச்சு ஆட்சிக்கு எத்துணை எதிர்ப்பு உள்ளது என்பதை விளக்கிக் காட்டும் ஒரு சிறந்த நிகழ்ச்சியாகும். அம்பான் தீவைச் சேர்ந்த மக்கள் சுதந்திரப் பிரகடனம் செய்யும் அளவுக்கு அங்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு வளர்ந்து விட்டது. அதுமட்டுமல்ல, அம்பான் புரட்சி மேலும் பரவும் என எதிர்பார்க்கப் படுகிறது. டச்சு சர்க்கார் படைகள் அம்பானை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றன என்று சொல்லப்பட்ட போதிலும், அம்பான் புரட்சி அடக்கப்படும் என்று எதிர்பார்க்க முடியாது. அந்த அளவுக்கு இந்தோனேஷிய மக்கள் சக்தி வளர்ந்துவிட்டது.

இங்ஙனம், இந்தோனேஷியாவில் வளர்ந்து வரும் புரட்சி கிழக்காசியா மேற்கத்திய வல்லரசுகளுக்கோர் எச்சரிக்கையாகும். எனவே, காலனி ஆட்சி என்ற முறையில் டச்சு, பிரெஞ்சு ஆட்சிகள் இனி ஆசியாவில் நீடித்து நிலைத்திருக்க முடியாது. அமெரிக்காவில் ஆதரவை நம்பி டச்சு, பிரெஞ்சு ஆட்சியாளர் மேலும் தமது ஆதிக்க வெறியைக் காட்டுவார்களானால், அவர்கள் மூன்றாவது உலகப் போருக்கு ஆசியாவில் களம் அமைக்கின்றனர் என்றே சொல்லவேண்டும்.

ஆஸ்திரேலியாவில் கம்யூனிஸ்டுகள் ஆர்ப்பாட்டம் முற்றுகிறது

—————(0)—————

போலீஸ் பாதுகாப்புமுறையும் வலுக்கிறது

ஸிட்னி, ஏப். 27—

ஆஸ்திரேலிய பார்லிமெண்ட் முன்பு ஆர்ப்பாட்டம் செய்ய கம்யூனிஸ்டுகள் போட்டுள்ள திட்டத்தை, தடுப்பதற்காகத் நியூஸவுத்வேலிலிருந்து பலமான போலீஸ் படை கான்பெர்ராவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சி மீது தடைவிதிக்கும் மசோதா ஒன்று, பார்லிமெண்டில் இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிறது.

நியூஸவுத்வேலின் 4 நகரங்களிலிருந்து வரும் கம்யூனிஸ்டுகள், பார்லிமெண்டிற்குள் புக உத்தேசித்திருப்பதாகக் கூறப்படுகிறது. இதைத் தடுக்க தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

மே தினத்தன்று பெர்லின் போர்த்தளமாகும்?

————(0)————

அமெரிக்காவின் கவலை

லண்டன், ஏப். 27—

அமெரிக்காவிலிருந்து எவ்வளவோ எச்சரிக்கைகள்வந்து கொண்டேயிருந்தபோதிலும், பெர்லின் மீது தாங்கள் பாயப்போவது நிச்சயம்தான் என்று, கிழக்கு ஜெர்மன் கம்யூனிஸ்டுகள் கூறுவதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலைமையைப் பயன்படுத்தி கொண்டு, எப்படியாவது நேசநாட்டினரை பெர்லினிலிருந்து வெளியேற்றிவிட ரஷ்யர்கள் திட்டமிட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

நிலைமை முற்றிவிடும் பட்சத்தில், பிரிட்டிஷ் படைகளை விமானமூலம் கொண்டுவரவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. பெர்லினில் புகுவது வெறும் பிரசாரமிரட்டல் என்றே சில வட்டாரங்களில் கருதப்படுகிறது.

மெக்காவுக்கு மின்சார விளக்குகள்

ஜெட்டா, ஏப். 27—

மெக்காவுக்கு மின்சார விளக்குகள் போடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக 20லக்ஷம் ரியில்கள் செலவிடப்படுகின்றன. —ருனோப்

பிரிட்டன் - ஈராக் புது ஒப்பந்தம்

பாக்தாத், ஏப். 27—

பிரிட்டனுடன் இராக் ஒரு புது உடன்படிக்கையைச் செய்து கொள்ளவேண்டும் என்று, முன்னாள் போக்குவரத்து மந்திரி காஸாப் பகூன் கூறுகிறார்.

அவர் கூறுவதாவது—தமை உடன்படிக்கை 1930-ல் அப்போதிருந்த நிலைமைக்கேற்ப செய்து கொள்ளப்பட்டதாகும். இவை இராக் மக்களின் தேசிய அபிலாஷைகளுக்கு ஏற்ப புது ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும்.

மீண்டும் ஒரு யு. எஸ். ரஷ்ய விமானப் போர்

பேரிங்ஜலசந்தி மீது நடந்ததாம்

லண்டன், ஏப். 27—

அலாஸ்காவுக்கும் ஸைபீரியாவுக்குமிடையே உள்ள பேரிங்ஜலசந்தி மீது, அமெரிக்க ஸோவியத் விமானப் படை மீண்டும் ஏற்பட்டதாக, இங்கு அமெரிக்காவிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன. இச்சம்பவத்தில் ஒன்று கொன்று சுட்டுக்கொள்ளவில்லை என்றும், விமானச் சேதம் இருதரப்பிலும் எதுவும் ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

13 நாட்களில் 2500 மைல் நடந்தவர்

லண்டனிலுள்ள கோலின்பார்பூர் என்கிற வாலிபன் தன் சொந்த நாட்டிற்கு போகுமுன் ஊரை எல்லாம் சுற்றிப்பார்க்க விரும்பினன். அவன் 13 நாட்களில் 2800 மைல் நடந்தே பல இடங்களில் சுற்றி வந்தானும். —ருனோப்

மகாத்மா சீடர்கள் ஆட்சியில் மனித வேட்டையா?

————(0)————

குற்றமறியா மக்கள் கொடுமைக்குள்ளாயினர்

————(0)————

பட்டுக்கோட்டையில் பயங்கர போலீஸ் ஆட்சி !

பட்டுக்கோட்டை, ஏப் 27—

சென்ற திங்களன்று சந்தையின் காரணமாகப் பெருங்கூட்டமாகப் பட்டுக்கோட்டைக் கடைத் தெருவில் கூடியிருந்த மக்களை, ராணுவ போலீஸ் திடீரென்று தாக்கினார்கள். இதனால் சந்தைக்கு வந்திருந்த தாய்மார்கள் உள்ளிட்டப் பலருக்குப் பலத்த காயம் ஏற்பட்டது. ஒரு எச்சரிக்கையும் செய்யாமல் திடீரென்று பொது மக்கள் தாக்கப்பட்டதால் தப்பி ஓடக்கூட மக்களால் இயலவில்லை. மோர்க் கூடைகள் உடைக்கப்பட்டன; சர்பத் வண்டிகள் முடக்கப்பட்டன; பின்னும் பட்டாணி, பழம் ஆகியவைகள் சேதமாக்கப்பட்டதுடன், மண்பாண்டங்கள் உடைந்துபோம்போது, பலருக்குக் காயமேற்படக் காரணமாயிருந்தன. இந்நேரத்தில் பள்ளி மாணவர்கள் பள்ளிக்கூடம் விடப்பட்டதால், அப்பக்கம் ஓடினார்கள். அவர்களில் சுமார் 8 வயதுள்ள ஒரு குழந்தையைக் கண் தெரியாமல ராணுவப்போலீசார் அடித்து, வயிற்றில் பலத்த காயத்தை உண்டாக்கினார்கள்.

இந்தத் தடியடிப் பிரயோகத்தால், அங்காடிக் கடைக்காரர்களுக்கு ரு 1000 நஷ்டமும், மற்றக் கடைக்காரர்களுக்கு ரு 5000 நஷ்டமும் ஏற்பட்டிருக்குமென்று கருதப்படுகிறது.

தடியடிப் பிரயோகத்துக் காரணம் என்னவென்று பார்க்கையில் அன்று 3 மணிக்கு அவ்வூரில் மிராசுதாரர் கூட்டம் நடக்க இருந்ததாம், அதனால் பாதுகாப்புக்குராணுவப் போலீஸ் வரவழைக்கப்பட்டிருந்தார்களாம். ஜில்லா ராணுவ அதிகாரியும் அங்கு வருவதால் தெருவில் கூட்டம் இருக்கக்கூடாதென்றே இத்தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டதாம்.

பிற்பகல் 3 மணிக்கு நடந்த மிராசுதார் கூட்டத்தில், தோழர் வி. நாடிமுத்துப் பிள்ளை பேசுகையில், போலீஸ் தடியடிப் பிரயோகம் செய்ததற்கு வருத்தப் படுவதாகக் கூறினர். (ஒ. நி.)

மாலை மணி

சென்னை 28—4—50 வெள்ளிக்கிழமை

அந்தத் துணிவு!

"கல்லூரிகளில் இந்தியே பாடம் பயிற்றும் மொழியாக இருக்கவேண்டும் என்பதை. சென்னை ஒருக்காலும் ஒப்புக் கொள்ளாது.

அப்படிப்பட்ட முயற்சி சென்னை மாநிலத்தில் பலவித தொல்லைகளுக்குக் காரணமாகி விடும்."

இவை, இந்தி எதிர்ப்புணர்ச்சியால் உந்தப்பட்ட யாரோலோ கூறப்பட்டவை யாகும் என்றே எவருக்கும் எண்ணத்தோன்றும்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்காரனாக இல்லாவிட்டாலும், இந்தி எதிர்ப்புப் பாதையின் அருகே நடந்துகொண்டிருக்கும் அனுதாபியாலே சொல்லப்பட்டவையாக இருக்கக்கூடும் என்றும், எண்ணுவர் சிலர்.

காங்கிரஸ் திட்டத்திலே வெறுப்புக்கொண்டு, வெளியேறி, வரக்திகொண்டு, எதையும் எதிர்த்து நிற்கும் மாஜி காங்கிரஸ்வாதி—ஆனால் தமிழிலே சிறிது பற்றுக்கொண்டவர் யாரும் கூறியிருக்கக் கூடுமோ என்று ஊகிக்கவும் செய்வர்.

இப்படிப்பட்ட பல்வேறு எண்ணங்கள் தோன்றக் கூடும், பொதுமக்கள் மனதிலே—காரணம், அந்தச் சொற்கள் அப்படிப்பட்ட கருத்தைத் தாங்கி நிற்கின்றன.

இந்தக் கருத்தை வெளியிட்டவர், வேறு யாருமில்லை ஆரிய நாகரிகத்திற்கு அடிமைப்பட்டிருப்பதிலே அக மகிழ்ச்சி கொள்பவர்—ஆரிய தர்ம கலாசாரத்தைக் காப்பாற்றுவதிலே அசகாய சூரர்—சமஸ்கிருதத்திற்கு மேன்மை வாங்கித்தரும் தீரர்—ஹிந்தியின் போஷகர்-தமிழின் வைரி-சீர்திருத்தத்தின் விரோதி—சென்னைக் கல்வி அமைச்சர்—தோழர் மாதவமேனன்தான்!

இந்தக் கருத்தை வெளியிடும் நிலைமையில் மட்டுமல்ல, இந்தக் கருத்துக்காக வாதாடவும் செய்திருக்கிறார்! அதோடு மட்டுமல்லாமல் வெற்றியும் பெற்றுள்ளார்! ஆச்சரியந்தான், ஆனால் உண்மையாக நடைபெற்றிருக்கிறது!

சென்னைக் கல்லூரிகளில் இந்தி பயிற்றும் மொழியாக இருக்க முடியாது; அம்முயற்சி பல தொல்லைகளுக்கு இடந் தரும்.

இப்படிக் கூறியுள்ளார் மந்திரி மாதவமேனன், மத்திய கல்வி ஆலோசனை போர்டு கூட்டத்தில். கேள்விப்பட முடியாதவரிடத்திலிருந்து இந்தக் கருத்தைக் கேட்கிறோம், விந்தைதான்!

மத்திய கல்வி ஆலோசனை போர்டு கூட்டத்தில், கல்லூரிகளில் அ...லத்திற்குப் பதிலாக, இந்தியைப் பயிற்றும் மொழியாக வைக்கலாமா என்ற பிரச்சினை எழுந்தபோது தான், அத்தகையதொரு திட்டத்தைச் சென்னை ஏற்றுக் கொள்ளாது என்ற கருத்தை, திட்டவட்டமாக வெளியிட்டுள்ளார் சென்னைக்கல்வி அமைச்சர்.

அவருக்கு வந்தத் துணிவு எங்கிருந்து வந்தது? எப்படிப் பிறந்திருக்கக் கூடும்? இந்தி மீது கொண்டுள்ள வெறுப்பு காரணமாக இருக்கக் கூடுமா? அல்லது ஆங்கிலத்தின் மீது கொண்டுள்ளஆசை காரணமாகுமா? அல்லது அந்தத் திட்டத்தைத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் முழுமூச்சுடன் எதிர்த்தே தீருவர் என்ற அச்சங் காரணமாக முடியுமா? என்றெல்லாம் ஊகிக்கத் தோன்றுகிறது. இந்தியின் மீது கொண்டுள்ள அருவருப்பாக இருக்க முடியாது, ஏனென்றால், இந்தியைப் பரப்பித்தீர வேண்டும் என்பது கட்சியின் கொள்கை! ஆங்கிலத்தின்மீது ஆசை என்று கூறமுடியாது, ஏனெனில், ஆங்கிலத்தின் அவசியத்தைஉணர்ந்தாலும், உணராவிட்டாலும் அது "அன்னிய பாஷை"! இவை யிரண்டுமில்லை என்னும்போது, தமிழ் மக்கள் திட்டத்தை எதிர்ப்பார்கள், அதனால் பல தொல்லைகள் ஏற்படும் என்று கருதிய அச்சமே அமைச்சரை இப்படிச் சொல்ல வைத்திருக்கிறது, என்பது புலனாகும்.

தமிழின் வைரியாகவும், ஆணவத்தின் சொரூபமாகவும் விளங்கும் தோழர் மாதவமேனனுக்கு அருவருப்பு அல்ல—ஆசையுமல்ல — அச்சமேதான்,கல்லூரியை இந்திமயமாக்கும் திட்டத்தை எதிர்க்கச் செய்திருக்கிறது. இந்தியை இஷ்டப்பாடம்—கட்டாயப் பாடம் என்றெல்லாம் ஆக்கும்போதே, தமிழகத்தில் கடுஞ்சொல்லும், கண்டனமும் மொழிப்போராட்டக் களமும் ஏற்படுகிறதே, இந்தியைப் பயிற்றும் மொழியாக ஆக்கிவிட்டால், இன்னமும் என்னவென்னவெல்லாம் ஏற்படுமோ என்ற அச்சந்தான், அமைச்சரை அந்த நேரம் ஆட்டிப் படைத்திருக்கிறது. அந்த அளவுக்காவது அஞ்சுவது அஞ்சி நடக்கும் பண்பு, அமைச்சரிடம் ஏற்பட்டது காண மகிழ்கிறோம்.

இறுதியாகக், "கல்லூரியில் பாடம் பயிற்றும் மொழி "எந்த இந்திய மொழியாகவாவது" இருக்கலாம் என்ற முடிவுக்கு கல்வி ஆலோசனை போர்டு வந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த முடிவு ஓரளவுக்கு வரவேற்கத் தக்கதுதான்.

இந்தி, பாடம் பயிற்றும் மொழியாக இருக்கக்கூடாது என்பதில் மாதவமேனன் வெற்றிபெற்றுள்ளார். பாராட்டுதலுக்குரியவர், அந்த அளவில்! இந்திதான் பயிற்றும் மொழியாக இருக்கவேண்டும் என்பதை வற்புறுத்தியவர்கள், யார் தெரியுமா, அவர்கள்தாம் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களும், ஆட்சிப் பீடத்தை ஆட்டி வைப்பவர்களுமான உத்தர பிரதேசத்தார்-மத்திய பிரதேசத்தார்—பீஹாரார். இந்தியை நாட்டின் பொதுமொழியாகவும், அரசியல் மொழியாகவும் சட்டப்படி ஆக்க, துடியாய்த் துடித்தவர்கள் இவர்கள்தாம், இவர்களுக்கு அத்தகைய துடிப்புணர்ச்சி இருப்பதிலே ஆச்சரியமில்லை! ஆனால் தென்னாட்டவர்கள் அத்துடிப்புணர்ச்சிக்கு அடிமைப் போனதுதான் ஆச்சரியம்!

தோழர்மாதவமேனனுக்கு இந்த ஒரு கட்டத்தில் ஏற்பட்டிருக்கும் துணிவு, அச்சத்தின் அடிப்படையில் அமையாமல், கடமையுணர்ச்சியின் அடிப்படையில் அமைந்திருந்தால் இந்தியே நாட்டில் அடியெடுத்து, வைத்திருக்க இடம் ஏற்பட்டிருக்காது. ஆனால் நம் நாட்டில் அமைந்திருக்கும் கல்வி அமைச்சரோ அறிவு வழி செல்ல மறுத்து, அச்சத்தின வழியே செல்பவராக இருந்து வருகிறார். திராவிடத்தில் இந்திநுழைவுக்கே பேரெதிர்ப்பு காட்டி, அதன் மூலம் அமைச்சரின் உள்ளத்தில் அச்சத்தை உண்டாக்கியிருந்தால். இந்தியைக் கட்டாயப்பாடமாக்கும் முயற்சியை விட்டிருந்தாலும் விட்டிருக்கக் கூடும்.

ஆகவே, நாம் அமைச்சருக்குக் கற்பிக்க வேண்டியபாடம், தேவையில்லாத-பயனற்ற-அடிமைப்படுத்த வந்திருக்கும் இந்தி தமிழ் நாட்டிற்கு, திராவிடத்திற்குவேண்டவே வேண்டாம் என்பதை எதிர்ப்பின் மூலம் தெரியப்படுத்துவதே யாகும். அந்த எதிர்ப்பு அச்சத்தை அமைச்சருக்குக் கொடுக்குமேயானால், இப்பொழுது ஏற்பட்டிருக்கும் அந்தத் துணிவு மீண்டும் ஏற்படக்கூடும்! அந்தத் துணிவு கல்வி அமைச்சருக்கு ஏற்பட வேண்டும் அல்லது அந்தத் துணிவுள்ள கல்வி அமைச்சர் ஒருவர் நாட்டிற்கு ஏற்பட வேண்டும்! பின்னர் இந்த நாட்டைப் பிடித்திருக்கும் இந்தித்தொல்லை யொழிய வழி தானாக ஏற்பட்டுவிடும்!

1940-ல் ஸ்டாலின் அளித்த பேட்டி விவர மர்மம் என்ன?

லண்டன், ஏப். 26—

1940-ல் மார்ஷல் ஸ்டாலின் லண்டன் பத்திரிகை, நியூயார்க் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டி விவரத்தை ரஷ்ய பத்திரிகை "பிரவ்தா" பிரசுரித்திருக்கிறது.

இப்பேட்டி விவரம் ரஷ்யாவில் பிரசுரிப்பது இதுவே முதற்தடவை. ஸ்டாலினிடம் அப்பொழுது ரஷ்யாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையே சமாதானம் நிலவ வழி உண்டா என்று கேட்கப்பட்டதென்றும் அதற்கு ஸ்டாலின் பதில் அளிக்கையில், அமெரிக்க முதலாளிகள் எங்கள் வழிக்கு வாராமல் இருந்தால் நாங்களும் அவர்கள் வழிக்குபோகமாட்டோம்என்றாராம்.

ஸ்டாலின் மேலும் கூறுகையில் பிரிட்டனுடனும், புனைடெட் ஸ்டேட்ஸுடனும் நெருங்கிய வர்த்தக தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள ரஷ்யா விரும்புகிறது என்று கூறினாராம். இப்பொழுது இதை பிரசுரிப்பது ஏன் என்பதைப் பற்றி "பிரவ்தா" எக்காரணத்தையும் வெளியிடவில்லை.

ரயில்வே சர்வீஸ் கமிஷன் எடுபட்டது

சென்னை, ஏப். 27—

சென்னை, பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி ஆகிய இடங்களில் இருந்த ரயில்வே சர்வீஸ் கமிஷனின் கிளைக் காரியாலயங்கள் இப்போது எடுபட்டுவிட்டன.

இதற்குப் பதிலாக பம்பாயில் ஒரு மத்திய சர்வீஸ் கமிஷன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இக்கமிஷன் செய்யவிருக்கும் வேலைகளாவன:

அஸ்ஸாம் ரயில்வேயைத் தவிர இந்தியாவிலுள்ள இதர ரயில்வேக்களின் மூன்றுவது கிரேட் சிப்பந்திகளை நியமிப்பது; இனி எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் சமஸ்தான ரயில்வேக்களின் கெஜெட்டில் இல்லாத சிப்பந்திகளின் சம்பளங்களைப் பரிசீலனை செய்வதுடன் அவரவர்கள் வேலைத்தரம், பொறுப்பு இவைகளுக்கு ஏற்றபடி சம்பளத்தை நிர்ணயித்து சிபார்சு செய்தல்.

இதற்காக அவ்வப்போது இந்திய ரயில்வேக்களிலுள்ள அதிகாரிகளை மெம்பர்களாக கமிஷன் சேர்த்துக்கொள்ளும்.

ரயில்வேபோர்டு கமிஷனிடம் ஒப்படைக்கும் சில காரியங்களையும் இக்கமிஷன் நிறைவேற்றி வைக்கும்.

யு. எஸ். செயற்கை ரப்பர்

லண்டன், ஏப். 27—

யுனைடெட்ஸ்டேட்ஸ் முன்பு எவ்வளவு செயற்கை ரப்பரை உபயோகித்து வந்ததோ அதைவிட பாதி பங்கு அதிகமாகவே இனி உபயோகித்துவரும் என்று ஆம்ஸ்டர்டாம் வர்த்தக வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இப்பொழுது மாதத்திற்கு சராசரி 20,000 டன் செயற்கை ரப்பரை யு. எஸ். உபயோகிக்கிறதாம். இதனால் இயற்கை ரப்பரின் விலைவாசிகள் குறையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜெக். மந்திரிசபையில் மாறுதல்

லண்டன், ஏப். 27—

ஜெக். மந்திரிசபையில் மாறுதல் ஏற்பட்டிருப்பதாகவும், பாதுகாப்பு மந்திரியாக இப்போதுள்ள கட்சியில்லா மந்திரி ஸ்வோபோடாவுக்கு பதிலாக, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த டாக்டர் அலெக்ஸிசெபிகா நியமிக்கப்பட்டிருப்பதாகவும் வியன்னாவிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

செபிகா ஜெக். கம்யூனிஸ்டுகளில் மிகவும் தீவிரவாதியாவர். ரஷ்யாவின் மார்ஷல் ரோகோஸ்வாஸ்கி போலந்தின் ராணுவத் தலைவராக நியமிக்கப்பட்டது எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு முக்கியமானது இந்த நியமனமும் என்று கூறப்படுகிறது.

ரூபாய் நோட்டுகளை அடுப்பில் ஒளித்து வைத்தாள்!

லண்டன், ஏப். 27—

லண்டனில் ஒரு பெண் தன் வாழ்நாளில் பாடுபட்டு சேமித்துத் ரூ. 6500 கரன்ஸி நோட்டுகளை சமையல் அறையிலுள்ள அடுப்பிற்குள் ஒருவருக்கும் தெரியாமல் ஒளித்து வைத்திருந்தாளாம். ஒரு நாள் ஞாபகமில்லாமல் அந்த அடுப்பை அவள் பற்றவைத்து விட்டாள்.

பின்னர் கருகிப்போன பண நோட்டுகளுடன் பிரஜைகள் ஆலோசனை ஸ்தாபனத்திடம் வந்து, தனக்கு எப்படியாவது உதவி செய்ய முடியுமா என்று மன்றாடிய போது தான் விஷயம் வெளிப்பட்டது.

ஸ்டர்லிங் கடன் பற்றி கிரிப்ஸ்-கிருஷ்ணமேனன் ஆலோசனை

லண்டன், ஏப். 27—

ஸர்ஸ்டாபோர்ட் கிரிப்ஸை அவருடைய காரியாலயத்தில் இந்திய ஹைகமிஷனர் தோழர் கிருஷ்ண மேனன் சந்தித்து நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

இதற்கு முன்னதாக பாகிஸ்தான் நிதிமந்திரி தோழர் குலாம்முகம்மதை சந்தித்துப் பேசினார்.

என்ன விஷயம் உரையாடல் நிகழ்ந்தது என்பது குறித்து இந்தியா ஹவுஸ்மூலமாகவோ அல்லது பிரிடிஷ் நிதி இலாகா மூலமாகவோ எவ்விதத்தகவலும் கிடைக்கவில்லை என்றாலும், ஸ்டர்லிங் கடனைத் தீர்க்கும் பொறுப்பை அமெரிக்காவின் தலையில் கட்ட பிரிட்டன் போட்டுள்ள திட்டம் சம்பந்தமாகவே இருக்கும் என்று கூறப்படுகிறது.

நடிகை ஷர்லியின் இரண்டாவது திருமணம்?

ஹாலிவுட், ஏப். 27—

பிரபல நடிகை ஷர்லிடெம்பிள் ஹாவாயைச் சேர்ந்த ஒரு பணக்காரரின் குமாரரான சார்லஸ் பிளாக்கை மணம் செய்துகொள்ளப் போவதாக, இருந்துவந்த வதந்தியை ஷர்லியின் தாயார் மறுத்திருக்கிறார்.

5 மாதங்களுக்கு முன்புதான் நடிகர் ஜான் அகார் என்பவரும் ஷர்லி விவாக ரத்து செய்துகொண்டிருக்கிறார். காலிபோர்னியாவின் சட்டப்படி விவாகரத்து செய்துகொண்ட ஒரு வருஷத்திற்கு மறுவிவாகம் செய்து கொள்ளக்கூடாதாம்.

சி. ஆர். டில்லி செல்கிறார்

சென்னை, ஏப். 27—

முன்னாள் இந்திய கவர்னர் ஜனரல் தோழர் சி. ராஜகோபாலாச்சாரி நேற்று விமானமூலம் பம்பாய்க்குப் புறப்பட்டார். அங்கிருந்து அவர் டில்லிக்குச் செல்வார். பழைய நண்பர்களைக் காணும் நோக்கத்தோடு செல்வதாக அவர் கூறியிருக்கிறாராம்.

டில்லியில் தோழர் ராஜேந்திரப் பிரசாத்தின் விருந்தினராக அவர் இருப்பார்.

நேட்டாலில் கலகம்

பிரிடோரியா, ஏப். 27—

நேட்டாலில் மோசஸ் நியர் ஜில்லாவில் சுதேசிகளிடையே உள்ள இரு கட்சியினருக்கும் கைகலப்பு ஏற்பட்டுவிட்டது. மூன்று சுதேசிகள் கொல்லப்பட்டிருப்பதுடன் அநேகர் காயமடைந்துமிருக்கின்றனர். அநேக குடிசைகளுக்குத் தீவைக்கப்பட்டு விட்டன. நிலைமை இன்னும் மோசமாகலாம் என்ற பீதியில் அப்பிரதேசத்திலிருந்து பெண்களும், குழந்தைகளும் வெளியேற ஆரம்பித்துவிட்டனர். அந்த இடத்தில் நிலைமையை அடக்க 100 போலீஸ்காரர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

நாடகத்தின் நடுவில் சிங்கம்

லண்டன், ஏப். 27—

ஸ்டாபோர்ட்ஷயர் தியேட்டரில் ஒரு நாடகம் பாதி நடந்துகொண்டிருக்கும்போது, ஒரு சிங்கம் எப்படியோ கூண்டிலிருந்து தப்பி மேடைக்கு வந்துவிட்டது. ஆனால் அது மிகவும் அமைதியாக நடந்துகொண்டதால், நாடகம் பார்ப்பவர்கள் எல்லோரும் அதுவும் நாடகத்தின் ஒரு பகுதி என்று நினைத்துக் கொண்டிருந்துவிட்டனர்.

லண்டன், ஏப். 27—

எச். எம். எஸ். சம்பானியா என்ற பிரிட்டிஷ் விமானந்தாங்கி பிரிட்டனின் திருவிழாவின்போது காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. விமானம் வந்து இறங்கும் தளத்தில் 'திறந்தவெளி' ஹோட்டல் நடத்தப்படும்.

இந்தியா-பாக்கிஸ்தான் நல்லுறவுப் பேச்சு

கராச்சியில் நேரு-லியாகத் சந்திப்பு

கராச்சி, ஏப் 27—

இந்தியாவின் பிரதம மந்திரி தோழர் பண்டித நேரு, நடுப்பகல் விமானமூலம் கராச்சி வந்து சேர்ந்தார். பாக்கிஸ்தான் பிரதம மந்திரி தோழர் லியாகத் அலி, அயல்நாட்டு மந்திரி தோழர் ஜபுருல்லா உள்ளிட்ட பலர் பண்டித நேருவுக்கு வரவேற்பளித்தனர்.

பத்திரிகை நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பண்டித நேரு பதிலளிக்கையில், தனக்கும் தோழர் லியாகத் அலிக்கும் எவை முக்கியமானவையென்றுபடுகிறதோ, அவைகளைப் பற்றி ஆலோசிக்கப்படுமென்று கூறினர்.

காஷ்மீர் பிரச்சினையைப் பற்றியும் ஆலோசிக்கப்படலாமென்று பண்டித நேரு அறிவித்தார்.

நேற்று பிற்பகலில், தோழர் ஜின்னாவின் கல்லரைக்குச் சென்று ஒரு மலர்செண்டைக் கல்லரை மீது வைத்து தோழர் நேரு தம் மரியாதையைத் தெரிவித்துக்கொண்டார்.

பாக்கிஸ்தான் கவர்னர் ஜெனரல் தோழர் ராஜாநஜிமுத்தீன் தோழர் நேருவுக்கு ஒரு விருந்தளித்தார். நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விருந்தில் கலந்துகொண்டார்கள்.

நேரு—லியாகத் பேச்சு

டில்லி ஒப்பந்தத்தை நடைமுறையில் கொண்டு வருவது பற்றி நேற்று மாலை தோழர் லியாகத அலியும், பண்டித நேருவும் பேசியதாக அறிவிக்கப்படுகிறது. பேச்சு சம்பந்தமாக உத்தியோகபூர்வமான அறிக்கையொன்றும் வெளியிடப்படுமென்று தெரியவில்லை.

காஷ்மீர் பேச்சு

காஷ்மீர் விவகாரத்தைப் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட வேண்டுமென்று டில்லியிலிருந்து புறப்படு முன்பே தோழர் நேருவுக்கு லியாகத் அலி அறிவித்திருப்பதாகக் கருதப்படுகிறது.

நேற்று கராச்சியில் தோழர் ஜபுருல்லாகான்விட்ட அறிக்கையொன்றில் ஐ. நா. வின் தலையீட்டில்லாமலே காஷ்மீர் பிரச்சினை தீர்த்துக் கொள்ளப்படலாமென்று கூறியுள்ளார். தோழர் லியாகத் அலி கான் ஏப்பரல் 29 தேதி அமெரிக்காவுக்குப் புறப்படுவதால் மூன்று நாட்களில் பேச்சு வார்த்தை முடிந்தாக வேண்டும். ஆகையால் காஷ்மீர் பிரச்சினை அதிகமாக விவாதிக்கப்பட மாட்டாதென்று தெரிகிறது.

"கூட்டுக் கொள்கை அவசியம்"

பாதுகாப்பு, போக்குவரத்து, விவசாயம், தபால் தந்தி ஆகியவை பற்றிய ஒரே விதமானகொள்கையை இந்தியாவும், பாக்கிஸ்தானும் சேர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்று தோழர் நேரு கராச்சிக்குப் புறப்படும்போது கூறியதாகத் தெரிகிறது.

அமெரிக்காவுக்கும், கனடாவுக்கும் இருப்பது போன்று இந்தியா, பாக்கிஸ்தானுக்கு ஒரு விதத் தொடர்பு ஏற்பட வேண்டுமென்று அவர் கூறியதாகத் தெரிகிறது.

செய்தித்தாள்கள் பாராட்டு

கராச்சியிலிருந்து வெளியிடப்படும் "டான்" இந்த் அப்சர்வர் என்னும் ஆங்கிச் செய்தித்தாள்கள் நேரு—லியாகத் பேச்சு வெற்றியடைய வேண்டுமென்றும். இந்தியாவுக்கும்—பாக்கிஸ்தானுக்கும் நல்லுறவு ஏற்பட வேண்டுமென்றும் தலையங்கங்கள் தீட்டியுள்ளன.

அக்கீசன் நல்லெண்ணம்

இந்தியா—பாக்கிஸதான் நல்லுறவுப் பேச்சு வெற்றிகரமாக முடிய வேண்டுமெனசுயேச்சைநாடுகளெல்லாம் விரும்புகின்றனவென்று அமெரிக்க அயல் நாட்டுக் காரியதரிசி தோழர் அக்கீசன் நேற்று கூறினர்.

கடலில் பாதுகாப்பு

லண்டன், ஏப் 27—

லண்டனில் பிரிட்டிஷ் சேனவில் கடலில் பாதுகாப்பு சம்பந்த ஆராய்ச்சிகளை நடத்தி வருகிறது. 5 நாடுகளைச் சேர்ந்த 20 நிபுணர்கள் இதில் கலந்துகொண்டிருக்கின்றன.

கப்பலை எப்படி உபயோகிப்பது, ஒட்டுவது, ராடார் விஷயம், மூழ்கிய கப்பல்களை வெளிப்படுத்துவது, நீண்டநேரம் வேலை கடலில் விழுந்தவர்களைத் தப்புவிக்க உடன் உதவி முதலிய விஷயங்கள் பற்றி இந்த நிபுணர்கள் ஆலோசித்து முடிவு செய்வர்.

வெள்ளையர் - ஆப்பிரிக்கர் கைகலப்பு

நைரோபி, ஏப். 27—

ஆப்பிரிக்க சுதேசிகளுடன் ஏற்பட்ட தகராறின் காரணமாகக் கொல்லப்பட்ட மூன்று பிரிட்டன் வாசிகளின் சவங்கள் ராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

சுதேசிகளில் ஒருவனைக் கைது செய்யவே இவர்கள் வந்ததாகவும் அதன் அந்த பிரஸ்தாப மனிதனை அவர்கள் ஒளித்துவைத்துவிட்டனர் என்றும், சுதேசிகள் அவர்கள் மீதுதான் பதிலுக்குத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதென்றும் இதன்விளைவாக பிரிட்டன்கள் மூவர் கொல்லப்பட்டனர் என்றும் தெரியவருகிறது.

முழுத் தகவல்களையும் சேகரிப்பதற்காக சென்னை போலீஸ் கமிஷனர் ஸ்தலத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறர்.

அரபு பத்திரிகையாளர் மாநாடு

பாக்தாத், ஏப். 27—

அரபு பத்திரிகைகாளர் மாநாடு ஒன்று கூட்டப்படவேண்டும் என்கிற யோசனை, இங்கு வரவேற்கப்படுகிறது. இந்த யோசனையைத் தெரிவித்தது எகிப்திய பத்திரிகையான 'அல்மிஸ்ரி' தாளும்.

அரபு பத்திரிகைகள் தங்கள் பத்திரிகை சுதந்திர விஷயத்துடன் மட்டுமின்றி அரபு மக்களுக்கு எவ்விதம் நன்மை செய்யலாம் என்பதையும் கவனிக்கவேண்டும் என்று சுயேச்சை கட்சி நேக் எல் சமராய் கூறுகிறர்.

ஏடனில் அடையாள சீட்டு முறை

ஏடன். ஏப். 27—

ஏடன்காலனியிலுள்ளவர்களுக்கு அடையாளச் சீட்டுகளை வழங்கும் முறையைக்கொண்டு வரலாமா என்று ஏடன் சட்டசபைக்கொளன்சில் ஆலோசித்துவருகிறது.

குடியேற்றக் கட்டுப்பாடு ஏற்படுத்தப்படவிருப்பதால், இந்த அடையாளச் சீட்டு முறையும் அவசியம் ஏற்படு நேரவேண்டும் என்றும் சொல்லப்படுகிறது.

பதிவு இல்லாதவர்கள் எல்லையைத் தாண்டி உட்புகவேண்டும் என்றால், அவர்கள் பர்மிட்டுக்கு மனுச்செய்யவேண்டும்.

அடையாளச்சீட்டுகள் இரண்டு விதமிருக்குமாம். ஏடனில் பிறந்தவர்கள் அங்கேயே நிரந்தரமாக வாழ்பவர்கள். இவர்களுக்கு நிரந்தர அடையாளச் சீட்டு கொடுக்கப்படுமாம். இதரர்களுக்குத் தற்காலிக அடையாளச் சீட்டு கொடுக்கப்படுமாம். 16 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர் பெண்கள் இவர்களுக்கு அடையாளச் சீட்டு வழங்கப்படமாட்டாதாம்.

இனி நடப்பவை

செங்காட்டுப்பட்டி:—சேர்வை உயர்நிலைத் தொடக்கப்பள்ளி மூன்றுவது ஆண்டுவிழா 30-4-50 மாலை தோழர் இராஜாசிதம்பர செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது துறையூர் தோழர் குடியமை அவர்கள் ஷை ஊர் வழக்கறிஞர் தோழர் வி. அரங்கசாமி செட்டியார் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

வேலூர்:—30-4-50 அன்று கோட்டை வெளியில் தி. மு. க. சார்பாக ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தமிழ்ப் பேரறிஞர், தோழர் கா. அப்பாதுரை, தோழர் சி. பி. சிற்றரசு ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

ஆரணி:—தி. மு. க. பொதுக் கூட்டம், 29-4-50 அன்று மாலை கொசப்பாளையம் தர்மராசா கோவில் மைதானத்தில் தோழர் கே. பி. சுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் பேசுவார்.

* * *

குணியமுத்தூர்:—தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் 30-4-50 அன்று மாலை நடைபெறும். அதுபோது தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., எஸ். சின்னதுரை, பி. பாலசுந்தரம் முதலியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

திண்டுக்கல்:—30-4-50 மாலை இரசகர் காந்தியார் திடலில், தோழர் கே. லெட்சுமணன், அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் மு. கருணாநிதி, ஈ. வெ. கி. சம்பத். என். ஈ. பாலகுரு, எஸ். அப்பாவு, எஸ். முத்து ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

பொள்ளாச்சி:—தி. மு. கழகப் பொதுக்கூட்டம் 30—4—50மாலை தேர்நிலைத்திடலில் நடைபெறும். அவ்வமயம் தோழர் டி. சதாசிவம் தலைமை வகிப்பார் தோழர்கள் க. அன்பழகன் எம். ஏ. கோவை புலவர் கிருட்டிணசாமி, 'தமிழர் நிலை' குறித்தும் பேசுவர்.

* * *

கோவை:—வ. உ. நெசப்பாளர் படிப்பகத் துவக்க விழா 30-4-50 ஞாயிறு காலை 9 மணிக்கு ராயல் தியேட்டரில் எஸ். ஆர். சுப்பிரமணியம் அவர்கள், தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், M. A. சி. பி. சிற்றரசு, மு. கருணாநிதி, எஸ். ஏ. மாணிக்கம், ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்

* * *

தென்கோவை:— 30—4—50 அன்று காலை தி. மு. கழக செயற்குழுக் கூட்டமும், பொது உறுப்பினர்கள் கூட்டமும் நடைபெறும். அதுபோது 16—4—50-ல் நடைபெற்ற துவக்கவிழா வரவு-செலவு கணக்குகள் ஆலோசனை செய்யப்படும். இடம்:—பெரிய கடைவீதியிலுள்ள தி. மு. கழகக் கட்டிடம்.

* * *

மருதூர்:-29—4—50 அன்று மாலை தி. மு. கழக சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் பலராமன் தலைமை வகிப்பார். தோழர்கள் சி. பி. சிற்றரசு, வி. [illegible]. அண்ணாமலை ஆகியோர் பேசுவார்கள்.

* * *

ஆம்பூர்:—தி. மு. க. பொதுக் கூட்டம், 30—4—50 மாலை வினாயகர்கோவில் தெருவு மைதானத்தில் நடைபெறும். அதுபோது ஏ. வி. பி. ஆசைத்தம்பி சொற்பொழிவாற்றுவார்.

* * *

திண்டிவனம்:- கீழ்ப்புத்துப்பட்டைச் சேர்ந்த முதலியார் குப்பம்

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

29 - 4 - 50

ஆண்டிப்பட்டி:—அன்பழகன், அய்யாச்சாமி.
ஆரணி:—டி. கே. சீனிவாசன்,
மருதநாடு:—சி. பி. சிற்றரசு, ஈ. தங்கவேலர்

30 - 4 - 50

திண்டுக்கல்:—மு. கருணாநிதி, ஈ. வெ. கி. சம்பத், என். ஈ. பாலகுரு, எஸ். அப்பாவு, எஸ். முத்து
வேலூர்:—கா. அப்பாத்துரை, சி. பி. சிற்றரசு
பவானி:—இரெ. இளம்வழுதி, எஸ். ஆர். சுப்ரமண்யம், ஜி. என். ராஜு
ஆம்பூர்:—ஆசைத்தம்பி
குணியமுத்தூர்:—இரா. நெடுஞ்செழியன், எஸ். சின்னத்துரை, பி. பாலசுந்தரம்

1 - 5 - 50

மே விழாக் கூட்டங்கள்

சென்னை:—சி என். அண்ணாத்துரை
மதுரை:—அ. சிந்தையன்
கோவை:—இரா நெடுஞ்செழியன்
பொன்மலை:—க. [illegible]ழகன், டி. கே சீனிவாசன்
கோவில்பட்டி:—[illegible]
ஈரோடு:—மு. கருணாநிதி, எஸ். அப்பாவு, என். ஈ. பாலகுரு, எஸ் ஆர். சந்தானம், ஆர் பெருமாள்.

லண்டன் துறைமுகத்தில் வேலை நிறுத்தம்

லண்டன், ஏப். 27—

லண்டன் துறைமுகத் தொழிலாளர் ஸ்டிரைக் கம்யூனிஸ்ட் தூண்டுதலின் [illegible] ஏற்பட்டதாகுமா என்பதைப்பற்றி விசாரணை அதிகாரிகள் ஆலோசித்து வருவதாக டெய்லி எக்ஸ்பிரஸ் கூறுகிறது.

அந்தப்பத்திரிகையின் விமான நிருபர் கூறுகையில், சென்ற வருஷமும் இந்த ஸ்டிரைக் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் ஒத்திகையின் போது நடந்ததென்றும், இப்போதும் விமான ஒத்திகையில் நடக்கும்போது இந்த ஸ்டிரைக் ஏற்பட்டிருக்கிறதென்றும் எடுத்து விளக்கியிருக்கிறர். —ரூனோய்

மீன் பிடிப்போர் பிணைச்சங்கதிறப்பு விழா 30-4-50 அன்று மாலை தோழர் வல்லத்ரான் செட்டியார் தலைமையில் நடைபெறும். தோழர் என். ஜீவரத்தினம் சங்கத்தைத் திறந்துவைப்பார். கொடியேற்றுவர்: தோழர் கே. [illegible]புராஜ், தோழர்கள் பி.வி. சித்திரானந்தம், என். என். நாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

திருநெல்வேலி:—தென் இந்திய ரெயில்வே தொழிலாளர் சங்க கிளையின் மூன்றாவது மாநாடு 30—4—50ல் திருநெல்வேலி ஜங்ஷன் இந்துக்கல்லூரி மண்டபத்தில் தோழர் எஸ். குருசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும் 29—4—50 சனி இரவு 9-30 மணிக்கு மாநாட்டு மண்டபத்தில் மத்திய சங்கத் தலைவர் தோழர் சட்டைநம்பிள்ளை அவர்கள் தலைமையில் பொன்மலைக் கிளைச் சங்கத்தார் "திருந்திய உள்ளம்" எனும் கலை நிகழ்ச்சியை நடத்துவார்கள்.

* * *

செயங்கொண்டம்:— 30-4-50 மாலை பாவசா அவர்கள் இல்லத்தில் வள்ளுவர் சொற்பயிற்சி மன்றத்தில் "சமூகத் தொண்டு" என்பது பற்றி பலர் பேசுவார்கள்.

* * *

குடந்தை:-30-4-50 ஞாயிறு காலை சென்னை ஓட்டேரி. தி. மு. கழக சார்பில் புலவர் தோழர் வே த. அர்ச்சுனனர் அவர்களால், குறள் வகுப்பு நடைபெறும். இடம் 21 பிரிக்லின் ரோட், ஓட்டேரி, சென்னை 12

கொழுப்பிற்குள் வைரங்கள்

பிரஸ்ஸல்ஸ், ஏப். 27—

நியூயார்க்கிலிருந்து சமையல் செய்வதற்காக அனுப்பப்பட்டிருந்த கொழுப்பு டின்களுக்குள் பட்டை தீட்டப்படாத வைரங்கள் இருந்ததைப் போலீஸார் கண்டுபிடித்தனர். சில நாட்களுக்கு முன் இதே பொருள்களில் மறைத்து வைக்கப்பட்ட ரத்தினங்களைப் போலீஸ் கைப்பற்றியிருக்கின்றனர். இது விஷயமாக ஒரு அமெரிக்கர் சந்தேகிக்கப் படுகிறர்

நாய்க்கு துப்பறியும் உத்யோகஸ்தர் பதவி

லண்டன், ஏப். 27—

போலீஸ் இலாகாவைச் சேர்ந்த 'லோகி' என்ற நாய், ஒரு திருடனை பிடித்துக்கொடுத்ததற்காக அதை ஒரு துப்பறியும் இன்ஸ்பெக்டர் பதவிக்கு உயர்த்தவேண்டும் என்று, லண்டன் நீதிபதி ஒருவர் சிபார்சு செய்திருக்கிறர். —ரூனோப்

லண்டனைச் சுற்றி போலீஸ் ரேடியோ வலையம்

லண்டன், ஏப். 27—

லண்டனைச் சுற்றி 100 மைல் பிரதேச தூரத்திற்குள் எது நடந்தாலும் ரேடியோ மூலம் செய்தியைத் தெரிவிப்பதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது இதனால் 'ஸ்காட்லாண்ட் யார்ட்' அதிகாரி இன்னும் திறமையாக தங்கள் கடமையைச் செய்ய சாத்யமாகும் என்று சொல்லப்படுகிறது.

ஜார்டன்-பிரிட்டிஷ் ஸ்டர்லிங் ஆலோசனை

அம்மான், ஏப். 27—

ஸ்டர்லிங் டிபாசிட் விஷயமாக பேச்சு வார்த்தைகளை பிரிட்டிஷ் நிதிஅதிகாரிகளுடனும் இங்கிலாந்து பாங்கி அதிகாரியுடனும் நடத்த ஜார்டன் நிதிமந்திரி ஷோலிமான் ஷூக்கர் பாஷா மே 8 தேதி லண்டன் செல்கிறர் என்று தெரிகிறது.

ஆசிரியர்களுக்கு கடிதம் எழுதி பொழுதுபோக்குகிறர்!

லண்டன். ஏப். 27—

ஸஸ்ஸெக்ஸைச் சேர்ந்த ஒருவரின் பொழுதுபோக்கு, பத்திரிகை ஆசிரியர்களுக்கு கடிதம் எழுதுவது தானும். இதுவரை 4235 கடிதங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றனவாம். இவர் இப்போது காலநிலை குறித்து ஜோஸ்யம் சொல்லவும் ஆரம்பித்திருக்கிறராம்.

தி. மு. கழக பொதுக்கூட்டங்கள்

———(0)———

தென்கோவை

கோவை, ஏப் 20—

16-4-50 அன்று மாலை தென் கோவை திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா, காந்தி சவுக் மைதானத்தில் தோழர் இ. செ. முத்து வரவேற்புரை யாற்றினார். தோழர் சிவசாமி தலைமைதாங்கினார். அதுபோது தோழர்கள் கவிஞர் கண்ண தாசன், நடராசன், இளங்கோ, முதலானோர் பேசினர். தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி திராவிட நாட்டில் வடநாட்டாரின் சுரண்டலை பற்றியும், அதைத் தவிர்க்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் திராவிட வியாபாரிகள் உடைமையைப் பற்றியும் பேசினார்.

———

முள்ளிப்பட்டு

முள்ளிப்பட்டு, ஏப். 23—

22-4-50 மாலை அழகிரி இடவில் தி. மு. க. துவக்கவிழா, தோழர் சேலாதன் தலைமையில் ஆரம்பமாயிற்று. அவ்வமயம் தோழர் டி. டி. அரசு கொடியேற்றுவித்தார். செய்யாறு புலவர் க. கோவிந்தன் பி. ஓ. எல் அவர்கள் கழகத்தைத் திறந்து வைத்தார். தோழர்கள் கே. நடேசன், சி. வி. குப்புசாமி முதலியோர் தி. மு. கழகம் ஆற்ற வேண்டியபணிகளையும், அதன் குறிக்கோள்களையும், அரசியல், பொருளியல், சமுதாயம் ஆகிய மூன்று துறைகளில் திராவிடம் தாழ்ந்துள்ள நிலைபற்றியும் விவரித்தும் பேசினார்கள். இன்று காலை 10-மணிக்குமணிக்குழு கூட்டம் கே. நடேசன் அவர்கள் தலைமையில் கூடி, தோழர் முத்துகிருஷ்ணனை செயலாளராகவும், ஆ. சுந்தரத்தை துணைச் செயலாளராகவும், ரா. மார்க்சகாசம் அவர்களை பொருள் உறுப்பினராகவும், ரா. ஆறுமுகம், மு. மார்க்கந்து ஆகியோர் விளம்பர உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நன்றிகூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

———

கரியாபட்டணம்

கரியாபட்டணம், ஏப். 24—

தி.மு.க. சார்பில் ஓர் மாபெரும்பொதுக் கூட்டம் 16-4-50 அன்று மாலை காட்டுக்குளத்தங்கரையில் நடத்தப்பட்டது. அவ்வமயம் தோழர் ஆ. சண்முகம் அவர்கள் தலைமை வகித்தார். தோழர் கோதண்டபாணி அவர்கள் திராவிட நாட்டுப்பண்பாட கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தலைவர் முன்னுரைகூற தோழர் சாக் அவர்கள் தி. மு. கழகக் கொள்கைகளைப்பற்றியும், இளைஞர்கள் நமது அறிவியக்கத்தில் சேரவேண்டிய அவசியத்தைப்பற்றியும் பேசினார். தோழர்என்.வி. நடராசன் அவர்கள் அரசியல், பொருளியல் சமுதாயம் ஆகிய மூன்றுதுறையில் திராவிடம் வீழ்ச்சியுற்றுள்ளதென்றும், இனி எழுச்சியுறவேண்டுமென்றும் பேசினார். தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளரால் நன்றி கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

சின்னையாபுரம்

சின்னையாபுரம், ஏப். 18—

இவ்வூர் தி. மு. கழகக் கூட்டம் தோழர் தங்கசாமி தலைமையில் 11-4-50 அன்று இனிது நடந்தது விழாவில் தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எம். எஸ். இராமசாமி, ஈ. வ. அ. வள்ளிமுத்து, ஆகியோர் கலந்து கொண்டனர்.

மலத்தமைதட்டுக்கிடையே தோழர் தங்கசாமி தலைமைதாங்கினார்.

தோழர் எம். எஸ். இராமசாமி, காங்கிரஸ்காரர்களின் கண்மூடித்தனமான போக்கையும், திராவிட நாடு பிரிவினை பற்றியும் விளக்கிப் பேசினார்.

தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி பேசும்போது, காங்கிரஸ்காரர்கள் சின்னையாபுரத்தில் மட்டுமல்ல மன், மாகாணம்பூராவும் கண்ணியக்குறைவாய் நடந்து வருவதையும், அரசாங்கமும் காங்கிரஸ்காரர்களுக்கும் பல இடத்தில் ஆதாரமாக இருப்பதுடன் அடக்குமுறையை நம் வாழ்கிறது என்றும், மக்களுக்கு உள்ள எல்லாக் குறைகளையும் நிவர்த்திக்க நாட்டுப் பிரிவினையே நல்ல மருந்து எனக் குறிப்பிட்டார்.

கடைசியாகத் தோழர் வள்ளிமுத்து இன்றைய கூட்டத்தைக் காங்கிரசார் கலைக்க முயன்றது கண்ணியமல்ல — நீயும் காங்கிரசா என்று கூறி, திராவிடநாட்டு பிரிவினையை விளக்கிப் பேசியபின், செயலாளர் நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது. தோழர் தங்கசாமி இல்லத்தில் பிரசாரகர்களுக்கு விருந்து நடந்தது.

———

கணியூர்

கணியூர், ஏப் 25—

தி. மு. க. சார்பில் 23-4-50 அன்று மாலை ரேடியோ நிலையில், அஞ்சாநெஞ்சன் அழகிரியின் நினைவுநாள் கொண்டாடப்பட்டது. அழகிரியின் படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. கூட்டத் துவக்கத்தில் கழகச் செயலாளர் தோழர் கே. ஏ. முருகேசம், கூட்டத்தின் அவசியத்தைப் பற்றியும், பேசவிருக்கும் நண்பர்களைப் பற்றியும் மக்களுக்கு எடுத்துக்கூறி, தோழர் எம். உதுமான் அவர்களைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டார். தலைவர் தம் முன்னுரையில், அழகிரியின் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பலவற்றை எடுத்துக்காட்டினார். தோழர்கள் சி. வி. ஆறுமுகம், கே. ஏ. கிருஷ்ணசாமி, விழா வளர்ந்த வரலாற்றையும், பார்ப்பனீயம் செய்த கொடுமைகளின் பட்டியலையும், உள்ளூரில் கழகம் செய்த பணிகளையும் எடுத்துக் கூறி, தனது பேச்சைமுடித்தார். தொடர்ந்து தோழர் இளஞ்சேரன் அவர்கள் தி. மு. கழகம், இதுவரை மக்கள் கருத்து, செய்யும் தொண்டு அழகிரியின் வரலாறு ஆகியபல பற்றி சுமார் ஒரு மணி நேரம் பேசினார்.

இறுதியாக தோழர் இலக்கியவிளைஞன் பி. ஏ. (ஆனர்ஸ்) அழகிரியின் வரலாறு பற்றியும், பணியின் பட்டியலையும் எடுத்துக்கூறி, உணர்ச்சி மிகுந்த சொற்பொழிவை சுமார் 2 மணி நேரம் நிகழ்த்தினார். பின் தோழர்களுக்கும் நன்றி நவில விழா இனிது முடிந்தது. தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் எம். உதுமான் நன்றி கூற...

கூட்டம் நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்த அத்தனை அன்பர்களுக்கும் நன்றி நவில விழா இனிது முடிந்தது.

என். ஜி. ஓக்களுக்கு வீடுகள்

———

சென்னை சர்க்கார் முயற்சி

———

சென்னை சர்க்காரால் சுமார் ஐந்து லக்ஷம் ரூபாய் செலவில் கட்டப்படும் ரோஜாபுத்தூர் ஸர். ஆர்தர்ஹோப் என்ஜினீயரிங் கல்லூரி கூடிய சீக்கிரம் முடிவடையுமென்று. இந்த ஜூலை முதல் கொண்டே வகுப்புகள் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிய வருகிறது.

சைதாப்பேட்டை "டாட்ஹண்டர்" நகரில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கட்டப்படவிருக்கும் சுமார் 10 வீடுகளுக்குக் கூடிய சீக்கிரம் அஸ்திவாரம் எழுப்ப சர்க்கார் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

சென்னை சர்க்கார் உத்தேசித்திருக்கும் இதர கட்டிடங்களின் விவரங்கள்:—

சுமார் ரூ. 2,50,000 செலவில் கும்பகோணம் சர்க்கார் ஆர்ட்ஸ் காலேஜுக்கு மற்றொரு கட்டிடம்; பாலக்காட்டு விக்டோரியா காலேஜுக்கு ரூ. 200000 செலவில் ஒரு புதிய விஞ்ஞான பிளாக் ; அனந்தபூர் ஆர்ட்ஸ் காலேஜுக்கு சுமார் ஒரு லட்சம் ரூபாயில் மற்றொரு கட்டிடம்; ஹோஸூர் கால்நடை ஆராய்ச்சி ஸ்டேஷன் மாணவர் ஹாஸ்டல் சுமார் ரூ. 1.50.000 செலவில், கள்ளிக்கோட்டையிலும் மங்களூரிலும் "பாலிடெக்னிக் இன்ஸ்டிடியூட்" கட்டிடங்கள் ஒவ்வொன்றும் ரூ. 5,00,000 செலவில் எழுப்பப்படும்.

———

கீழ்வங்கச் சிறையில் துப்பாக்கிப் பிரயோகம்!

———

ராஷ்ஷி மத்திய சிறையில் நடைபெற்ற கலவரமொன்றைச் சமாளிப்பதற்காகப் போலீசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோது மூன்று பாதுகாப்புக் கைதிகள் கொல்லப்பட்டனரென்றும், 36 பேர்கள் காயமுண்டனரென்றும் கிழக்கு வங்க சர்க்கார் அறிக்கை யொன்று கூறுகிறது. கைதிகளால் தாக்கப்பட்ட ஜெயில் அதிகாரிகள் காயமடைந்திருக்கின்றனர்.

———

லண்டன், ஏப். 27—

இங்கிலீஷ் கால்வாயை நீந்திக் கடக்க முயல்பவர்கள் உட்கொள்ளத் தக்க ஏற்ற உணவு இறைச்சி வெண்ணை, கிரீம், கொழுப்புஇவைதான் என்று லண்டன் டாக்டர் ஜார்ஜ்ப்ருஸ்டர் கூறினர்.

———

பணி நேரங்களுக்குப் பின் முடிந்தது. இடையிடையே எழுப்பப்பட்ட கை ஒலியும், சிரிப்பொலியும், மக்கள் கழகக் கொள்கைகளை வரவேற்பது போன்றிருந்தது. இறுதியாக கழகச் செயலாளர் தோழர் கே. ஏ. முருகேசம் விழா சிறப்புற நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்த அத்தனை அன்பர்களுக்கும் நன்றி நவில விழா இனிது முடிந்தது.

———

கோவில்பாளையம்

கோவில்பாளையம், ஏப். 25—

இவ்வூர் தி. மு. க. துவக்க விழா 23—4—50 அன்று மாலை மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்குத் தோழர் சாமிநாதன் தலைமை தாங்கினார். தலைவர் முன்னுரை கூறியபின், தோழர்கள் இளங்கோ, அ. ச. நடராசன், என். வி. நடராசன் ஆகியோர் கழகமும் தற்கால நிலைமையும் என்பது பற்றிப்பேசினார்கள். முடிவாகச் செயலாளர் தோழர் காழியப்பன் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

மே நாள் விழா பொதுக்கூட்டம்

1—5—50 திங்கள் மாலை 5-30 மணிக்கு

சென்னை கான்ரான்ஸ்மித் நகர் மைதானத்தில் நடைபெறும்

தோழர் சி. என். அண்ணாதுரை M.A.

வங்கக் கவி

ஹரீந்திரநாத் சடோபாத்தியாயா

ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்

சூளை தி. மு. கழகத்தார்.

அணுகுண்டு ஆராய்ச்சி நிலையத்தில் தீவிபத்து

———

ரூ. 10லட்சத்துக்குமேல் நஷ்டம்

———

அணுசக்தி கமிஷன்கள் நிர்வாக கட்டிடத்தில் நேற்றிரவு தீப்பிடித்து வெடித்தது. அதன் விளைவாக அக்கட்டிடம் நாசமடைந்தது.

மிகப் பிரமாண்டமான ஸைக்ளொட்ரோன் நிலையகட்டிடத்திற்கு அண்மையிலுள்ள கட்டிடம் ஒன்றிலிருந்து தீ ஜ்வாலை நூற்றுக்கணக்கான அடி தூரம் ஆகாயத்தை நோக்கிச் சென்றது.

அணுவைப் பிளக்கும் இயந்திரமான ஸைக்ளோட்ரானுக்கு இத்தீ பரவுமுன்பு அணைக்கப்பட்டது.

இந்த ஸ்தலத்தைச் சுற்றிப் பாதுகாப்புப்படையொன்று உடனே நிறுத்தப்பட்டது. தீஜ்வாலையைக் கண்டு அந்த ஸ்தலத்திற்கு வந்தவர்கள் வெளியிலேயே நிறுத்தப்பட்டனர்.

எரிந்துபோன கட்டிடத்தில் சாமான்கள் குவிந்து கிடக்கின்றன என்று பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

இயந்திரம் எதற்கும் சேதம் ஏற்படவில்லையென்றும், 1 லட்சத்தி 50 ஆயிரம் டாலர் பெறுமான சொத்துக்களே சேதமடைந்திருக்கும் என்றும் கமிஷன் உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்தார். பெர்க்லி ஆராய்ச்சி சோதனை சாலையின் ஒரு பகுதியில்தான் இத்தீவிபத்து ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது. இங்கு பைல்களையும் தொழில் இயல் சம்பந்தமில்லா சாமான்களையும் போட்டு வைப்பது வழக்கமாம்.

தீ ஏற்பட்டதன் காரணத்தை உடனே கண்டுபிடிக்க கமிஷன் உத்தியோகஸ்தர்கள் முனைந்திருக்கின்றனர்.

தீ ஏற்பட்டபோது கட்டிடத்தில் எவரும் வேலை செய்துகொண்டிருக்கவில்லை.

பெர்க்லியில் 5 ஆயிரம்டன் எடையுள்ள ஸைக்ளோட்ரோன் இயந்திரம் உலகத்திலுள்ள மிகப்பெரிதும் சக்தி வாய்ந்ததுமான இயந்திரங்களில் ஒன்றாகும்.

பெர்கலியம் 97 என்று சொல்லப்படும் ஒரு புதிய வஸ்துவை இவ்வியந்திரம் 3 மாதங்களுக்கு முன்பு உற்பத்திச் செய்ததாக அறிவிக்கப்படுகிறது. அணுசக்தி நிறையில் இந்த வஸ்து மிகக் கனமுள்ளதாம்.

நியூ ஜெர்ஸியில் பிரின்ஸ்டன்னிலுள்ள பால்மர் பௌதிக சோதனை சாலையின் ஸைக்ளோட்ரோன் இயந்திரம் பிப்ரவரி 22-ந் தேதி என்னையால் ஏற்பட்ட தீ விபத்தால் பூரணமாக நாசமடைந்துவிட்டது.

அறிவிப்பு

ரெஜினா மூட்டைப் பவுடர் மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரையைத் தருகிறது.

G. பழனியப்ப முதலியார், மதுரை.

திருமண அழைப்பு

தோழர் துரைக்கண்ணு-தோழியர் பொன்று அம்மை ஆகியோர் வாழ்க்கை ஒப்பந்தம் 30-4-50 அன்றுகாலை 8-மணியளவில் தோழர் காஞ்சி மணிமொழியார் தலைமையில் நடைபெறும். தோழர் என். வி. நடராசன் அவர்கள் சீர்திருத்தத் திருமணம் குறித்துப் பேசுவார். இடம்:- பரங்கிமலை அடுத்த வேளை நகர் வெள்ளாளத் தெரு, நெ. 1 இல்லம்

ஸ்வீடனில் எலிகள் தொல்லை

என்கோபிங், (ஸ்வீடன்) ஏப் 27—

ஸ்வீடனிலுள்ள என்கோபிங் என்ற நகரில் எலிகள் மிகவும் அதிகரித்து தொந்தரவு பொறுக்க முடியாமல் போனதால், அவைகளைக் கொல்ல விஷம் வைக்கப்பட்டது.

என்ன காரணத்தாலோ என்னமோ இந்த விஷத்தினால் எலிகள் சாவதற்குப் பதிலாக, இந்த விஷம் உண்டதினாலோ என்னமோ எலிகளின் தொகை இரட்டிப்பாகி யிருக்கிறது.

எலிகள் பூனைகளைக்கண்டால் இப்போது பயப்படுவதில்லையாம்.

———

வேண்டுகோள்

திருவனந்தபுரம், ஏப். 21—

கட்டிட நிதிக்குப் பணம் வேண்டி, தோழர் அண்ணாத்துரை அவர்கள் அறிக்கை விட்டு நாட்கள் பல ஆகியும், நம் மாவட்டத்திலுள்ள பல கிளைக் கழகங்கள், இன்னும் தங்கள் பங்கைச் செலுத்தாமல் இருந்து வருவதாகத் தெரிகிறது.

அன்புகூர்ந்து பணம் இன்னும் அனுப்பாத கிளைக் கழகங்கள், உடனே தங்களால் இயன்ற நிதியைத் திரட்டி தோழர் அண்ணாத்துரை அவர்களின் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறுவேண்டுகிறேன், என வ. ஆ. மா. தி. மு. கழகச் செயலாளர் தோழர் சி. வே. சுப்பராயன் அவர்கள் எழுதுகிறார்கள்.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street, Madras-1.